RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-222814

OPEN ACCESS

# திருமந்திரத்தில் சிவக்கோட்பாடுகள்

வே. வளர்மதி [அ, *]

[அ] தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு-638012, தமிழ்நாடு, இந்தியா.

# Principles of Siva in Thirumanthiram

V. Valarmathi [a, *]

[a] Department of Tamil, Vellalar College for Women, Erode-638012, Tamil Nadu, India

* Corresponding Author: valarmathi.v@vcw.ac.in

Received: 25-09-2022
Revised: 29-10-2022
Accepted: 18-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Thirumoolar has the principle that 'There is One Race and One God'. He has accepted Lord Shiva as the great deity in his Thirumanthiram. When we say the greatness of Shiva, it is said that 'Shiva is the one who directs the world just as life fits into the body and directs the body', therefore, Shiva is the life of the world. He who has many worlds as a body, he is the one God of all the worlds. Thirumanthiram describes this as "One who has seen it and a Deity for the World". Thirumanthiram has used many mythological stories here and there to make people aware of many rare truths. Among them, this article is to examine the nature of Eesan in the Thirumanthiram, which depicts the deeds and grace of Lord Shiva.

**Keywords:** Thirumoolar, Lord Shiva, Thirumanthiram, Deity

## முன்னுரை

'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்னும் கோட்பாடு உடையவர் திருமூலர். அவர்தம் திருமந்திரத்தில் பெருந்தெய்வம் என்று சிவபெருமானை ஏற்றுக்கொண்டுள்ளார். சிவனின் பெருமையைச் சொல்லும் போது, 'உடலில் உயிர் பொருந்தி உடலை இயக்குதல் போல உலகை இயக்குபவன் சிவன். ஆதலால் சிவன் உலகிற்கு உயிர்' என்று கூறுவர். உலகங்கள் பலவற்றையும் உடலாக உடையவன் அவன், அவனே அனைத்து உலகங்களுக்கும் ஒரே தெய்வமாக விளங்குபவன். இதனை,

"ஒன்று கண்டீர் உலக்கொரு தெய்வமும்" என்று திருமந்திரம் எடுத்துக்கூறுகின்றது. திருமந்திரம் பல அரிய உண்மைகளை மக்களுக்கு உணர்த்தப் பல புராணக் கதைகளை ஆங்காங்கே கையாண்டுள்ளது. அவற்றுள் சிவபெருமானின் செயலையும், அருளையும் புலப்படுத்தும் வகையில் அமைந்த திருமந்திரச் சித்திரத்தில் ஈசனின் தன்மையை ஆராய்வதே இக்கட்டுரை. திருமந்திரம் ஈசன் பற்றிய செய்திகளை ஐந்து பிரிவாக பகுத்துப் பார்க்கின்றது. அவையாவன 1.உலகத்தோற்றம், 2.ஐந்தொழில்கள், 3.சிவன் வடிவம், 4.சிவன் அணிகலன்கள், 5.சிவன் செயல்கள் என்பனவாகும்.

## உலகத்தோற்றம்

உலகம் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டது. இறைவன் சிவனே ஆவான். அவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன் பராபரன். சிவன் சக்தி என்று பிரிக்க முடியாதவன். உலகத் தோற்றத்தின்போது ஒளிமயமான பராபரனிடமிருந்து பரன் தோன்றும் பின் பரையும், பரையிடம் விளங்கும் நாதமும்

தோன்றும். சுத்தமாயையில் தோன்றுவன நாதம், விந்து, சிவன் சக்தி, ஞானம், செயல், இச்சை என்பன. இச்சையின் காரணமாகத்தோன்றும் அசுத்த மாயையிலிருந்து ஆகாயம், காற்று, நெருப்பு, நீர் ஆகியன தோன்றும். இவை ஒன்று கலந்து கடினத்தன்மை உடைய நிலமாகும். இவ்வைந்தில் உள்ள ஒவ்வொன்றிலும் ஐம்பூதங்களின் கூறுபாடு கலந்துள்ளது. இதனை,

"தேனின் கண் ஐந்துஞ்செறிந்தைந்து பூதமாய்

பூவின்கண் நின்று பொருந்தும் புவனம்"

என்னும் திருமந்திரப் பாடல் விளக்குகின்றது (Manikam, 2004). நிலமாகிய பூதத்தில் நிலத்தின் தன்மை அரைப்பங்கும், பிறநானகு பூதங்களின் தன்மைகள் அரைக்காலே அரைக்கால் பங்கும் உள்ளன.

## ஐந்தொழில்கள்

உலகைப் படைக்கும் சிவசக்திக்குப் புதல்வர்கள் பிரம்மன், விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என ஐவராவர் என (திருமந் 2459) திருமந்திரப் பாடல் கூறுகிறது (Manikam, 2004). உலகங்கள் இருநூற்று இருபத்து நான்கு என்பதனால் ஒவ்வோர் உலகுக்கும் இவ்வை வரும் சிவசக்தி புதல்வர்களாய் இருந்து அவற்றை இயக்குகின்றனர். உலக இயக்கத்தில் முக்கிய பங்குபெறும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் முறையே அயன், அரி, அரண் ஆகிய மூவரும் நிகழ்த்தும் போது சிவன் உடனிருந்து அறிவான். இதனைத் திருமந்திரம்

"புகுத்தறி வான்புவ னாபதி அண்ணல்

புகுத்தறி வான்புரி சக்கரத் தண்ணல்

புகுத்தறி வான்மலர் மேலுன்ற புத்தேள்

புகத்தறி யும்மூடிக் காகிநின் றாரே"

என்று விளக்குகிறது. சிவசக்தி விளையாட்டால் கதிரவன் இயக்கத்தில் மாறுபாடு ஏற்படுகிறது. அதனடிப்படையில் உலக இயக்கத்திற்கான பருவ காலங்களும் தோன்றுகின்றன. இக்கருத்தை தேவிபாகவதம் நூலும் கூறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது (Manikam, 2004). முத்தொழில்களையும் உலகில் முறையாகச் செய்வது சிவசக்தி கூட்டமாகும் என்பதனை,

"ஓராய மேஉல கேழும் படைப்பதும்

ஓராய மேஉல கேழும் அளிப்பதும்

ஓராய மேஉல கேழும் துடைப்பதும்

ஓராய மேஉல கேழும் தானே"

என்று திருமந்திரம் சுட்டுகிறது.

நான்காவது தொழில் 'திரோபவம்' என்பதாகும். இதன் பொருள் மறைத்தல் ஆகும். மகேசுவரன் சிவனது ஆணைப்படி சீவர்களுக்கு வினையை ஊட்டுவான். இறைவன் சீவர்களுக்கு வினைப்போகம் ஊட்டுவதை அச்சீவர்கள் அறியாதவாறு மறைத்து ஊட்டுவான்; பிரபஞ்ச அழிவுக்குப்பின் அத்தனையும் அதிலுள்ள சீவர்களையும் இறைவன் தன்னுள் மறைத்துக் கொள்வான். இவ்வாறு இருவகையில் மறைத்தல் தொழில் அமைகிறது (Manikam, 2004).

ஐந்தாவது தொழில் அநுக்கிரகம் ஆகும். இதற்கு அருளல் என்று பொருள் கூறுவர். சிவனது ஆணையை ஏற்றுச் சதாசிவன் சீவர்களுக்குப் பிறவியை அளிப்பதோடு மலநீக்கம் பெறவும் அருள் புரிகிறான். இவ்வாறு பல ஊழிகளையும், பல உலகங்களையும், ஐம்பூதங்களையும், தேவர்களையும் சீவர்களையும் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளும் ஐந்தொழில்களையும் செய்யும் பரமாக இருப்பவன் இறைவன் ஆவான்.

## சிவன் வடிவம்

இறைவன் அணுவினும் நுண்ணியன்; பஞ்ச பூதங்களாகப் பரந்தவன்; இயற்கையோடு இயற்கையாக இரண்டறக் கலந்தவன். அகந்தை கொண்ட அயனும் மாலும் இறைவனை அறிய முடியாமல் அலைந்தனர், அடிமுடி காணாது அவலமுற்றனர். ஒளிவடிவாக நின்றவன் இறைவன்; சிவசக்தியாய்ப் பிரிக்க முடியாது பராபரனாக விளங்குபவன்.

"பெண்ணொரு பாகம் பிறவி பெண்ணாமே" என்னும் பாடலில் சிவசக்தியாக உள்ள சிவன் உலகப் படைப்புக்காக ஆணாக (சிவன்) பெண்ணாக (சக்தி) இருந்தான் என்று கூறப்படுகிறது.

பராபரமாக உள்ள இறைவனிடம் பெண் தன்மையும் அடங்கியிருக்கிறது என்பதும், இறைவனே எல்லாமாகவும் இருந்து இயங்குகின்றான் என்பதும், படைப்புக்குப்பின் பெண் தன்மையை விரும்பிப் பெற்றுப் பெண்ணாக மாறுகிறான் என்பதை

"சத்தின் நிலையினில் தானான சத்தியும்

தற்பரை யாய்நிற்குந் தானாம் பாற்குடல்

உய்த்தகு மிச்சையில் ஞானாதி பேதமாய்

நித்த நடத்து நடிக்குமா நேயத்தே" திருமந்திரம் உணர்த்துகிறது (Azhagar Nambi, 2021).

வானமே உடலாக உடையவன் இறைவன் சிவசக்தியாக இறைவன் ஆடும் நடனம் தத்துவங்களை உள்ளடக்கியது. உலக நன்மைக்காக நடனமாடுபவள் சக்தி. அவள் நாற்பத்தொரு சக்திகளும், எட்டுக் கன்னிகளும் புடைசூழ வீற்றிருப்பவள்.

சிவன் சனகர், சனற்குமாரர் சந்தனர், சனாதனர் ஆகிய நால்வருக்கும் வேதம் அருளினார். அந்நிலையில் வேதம் அருளிய இறைவனைத் தட்சிணாமூர்த்தி என்பர். வேதம் கற்றும் அதன் உண்மைப் பொருளை அவர்கள் உணராத காரணத்தால் சிவனிடம் அதுபற்றிவினவ, இறைவனும் சின் முத்திரையால் அதனை உணர்த்தினான்.நடுவிரல், மோதிரவிரல், சிறுவிரல் ஆகியமூன்றும் ஆணவம், கன்மம் மாயை எனவும் சுட்டுவிரல் ஆன்மா எனவும் உணர்ந்து மும்மலம் நீக்கியபின் சுட்டுவிரல் ஆகிய ஆன்மா பெருவிரலாகிய சிவன் பாதங்களில் பணிதல் வேண்டும்(திருமந் 2424) என்பது அதன்கருத்து விரல்களைக் கொண்டு சின் முத்திரையில் கல்லால மரத்தின் கீழ்ச் சனகாதி நால்வர்க்கு வேதம் உணர்த்தும் சிவபெருமானின் உருவம் இன்றும் சிவாலயங்களில் காணப்படுகிறது.

இச்சான்றுகள் இறைவனின் வடிவ அமைப்பை ஓரளவு கோடிட்டுக் காட்டுகின்றன. இவ்வடிப்படையில் சிவனது வடிவங்கள் சிவலிங்கம் அல்லது கந்துவடிவம், தட்சிணாமூர்த்தி வடிவம், சிவசக்தி அல்லது அர்த்தநாரி வடிவம், நடராசன் வடிவம் என்பனவாகும் என்பது புலனாகிறது.

## சிவன் அணிகலன்கள்

வேதப்பொருளுணர்த்தும் சிவன் அணிந்துள்ள அணிகலன்கள் தனிச் சிறப்புடையவாகும். அவை மக்களுக்கு உலகின் உண்மைகளைக் குறிப்பாக உணர்த்துகின்றன எனலாம்.

அராபரன்: சிவன் அரவினை (பாம்பு) அணிகலனாக அணிந்தவன் என்பது,

'அராபரன் மன்னி மனத்துறைந்தானே" என்ற திருமூலர் வாக்கால் அறியலாம், அரவு, குண்டலினி யோகத்தை உணர்த்துவதற்காக அமைந்த ஒரு குறியீடு ஆகும்.

## பனிமதிசூடி

சிவன் தலையில் பிறைச் சந்திரனை தரித்துள்ளான். சந்திர யோகத்தால் நெற்றிக்கு மேல் ஏற்படும் ஒளியை அது குறிக்கிறது. இதற்காகவே ஒரு குறியீடாகச் சந்திரன் விளங்குகிறான்.

எலும்பு மாலை அணிந்தவன் சிவன். எலும்பில் சோதியை வெளிப்படுத்தும் சக்தி உள்ளது. இவ்வொளி சோதி வடிவானது, அதாவது வான வடிவானது சமய வல்லுநர்கள் தூல உரு அழிந்து ஒளி வடிவாக மாறி, மீண்டும் உலக உற்பத்தியின் போது தேவைக்கேற்ப உருவம் பெரும் தன்மையுடையது. இதனை ஆன்மா என்று கூறுவர். இப்பொருளை உணர்த்துவதற்காகவே சிவன் எலும்பு மாலையை (திருமந்திரம் 1661) அணிந்துள்ளான் (Azhagar Nambi, 2021).

## கவசத்திருநீறு

பேரூழிக் காலத்தில் எலும்பையும் மண்டையோட்டையும் ஏந்திக்கொண்டு எழுபவன் சிவன் (திருமந்திரம் 371) (Manikam, 2004). அப்போது இடுகாட்டுச் சாம்பலையும் வெண்ணீறாக அணிந்துருப்பான். மணிமுடி தரித்த திருமால் முதலிய தேவரது உருவமாகிய எலும்பையும், அறிவாகிய மண்டையோட்டையும் சிவன் சூக்குமத்தில் தாங்கவில்லை எனில் பிறவிக்கு வரும்போது மக்களுடைய பழைய உருவமும், அறிவும் பொருந்தாது தொடர்பின்றிப்போகும். ஆதலால் அறிவு உடல் என்பனவற்றைத் தொடர்புபடுத்தும் இணைப்புப் பொருளாக எலும்பிலிருந்து கிடைக்கும் வெண்ணீற்றின் கூறுகள் அமைந்துள்ளன.

## புலித்தோல்

சிவன் இடையில் ஆடையாக அணிந்திருப்பது புலித்தோல் ஆகும்.

“பொன்னைக் கடந்திலங் கம்புலித் தோலினன்”

என்று திருமந்திரம் கூறுகின்றது. தியானத்தினால் ஞானியர் தம் உடலில் பொன் போன்ற மஞ்சள் நிற ஒளியைத் தம்முள் காண்பர் என்பதை உணர்த்தவே இறைவன் புலித்தோலை ஆடையாக அணிந்துள்ளான்.

## கரியுரி

தாருகா வனத்து முனிவர்களின் அகந்தையை அடக்குவதற்காகச் சிவன் பிச்சாடனராக வந்தார். அவர்தம் அழகில் முனிவர்களின் மனைவியர் நிறையழிந்தனர் இதனால் முனிவர்கள் சினம் கொண்டு சிவனை அழிப்பதற்காக யாகம் செய்தனர் (Manikam, 2004). இவ்யாகத்தில் இருந்து வந்த புலியைக் கொன்று இடுப்பில் ஆடையாகக் கட்டிக் கொண்டார் சிவபெருமான். அடுத்து வந்த யானையை அழித்து அதன் தோலைப் போர்வையாக அணிந்து கொண்டார். இந்தப்புராணச் செய்தியை

“அடுத்த ஒருபுலி கொடுத்த சோமனும்

ஆனை கொடுத்தவி தான்ச் சேலையும்”

என்று திருக்குற்றாலக் குறவஞ்சியும் குறிப்பிடுகின்றது. இப்புராணச் செய்தி ஆணவம் அழித்தல் என்னும் தத்துவத்தைக் குறிக்கிறது. கரிய இருளாகிய யானை அகந்தை நிறைந்த ஆன்மாவாக உருவகம் செய்யப்படுகிறது. மும்மலங்களில் ஒன்றான ஆணவம் மூலமலமாகக் கருதப்படும். அதனை அழித்தால் ஆன்மா ஒளிபெற்று இறைவனைக் காண்பதற்கு வழி பிறக்கும். உலகோர்க்கு இத்தத்துவத்தை உணர்த்தவே இறைவன் கரியுரி அணிந்திருக்கிறான்.

## நீலகண்டன்

பாற்கடலைக் கடைந்தபொழுது அதில் தோன்றிய நஞ்சினை உண்டவன் சிவன். அது மிடற்றில் நின்றதால் சிவன் கண்டம் கறுத்தவன் ஆனான். ‘கண்டம் கறுத்தல்’ என்பதில் ஒரு தத்துவக் கருத்து உள்ளடங்கியுள்ளது. விந்து ஜெயம் பெற்று சாதகனுக்கு விந்து மாற்றமடைந்து கண்டத்தைத் தாண்டிய பின்னரே ஒளி ஏற்படும். அதுவும் சிறிது சிறிதாக நீலம், மேகம் வெண்மேகம் முதலிய நிறங்கள்

முதலில் நிறங்கள் முதலில் ஏற்பட்டு இறுதியில் சுத்தப் படிகநிறம் ஏற்படும். 'நஞ்சு' என்ற சுக்கிலத்தைக் குறிப்பிடாமல் 'சினஞ் செய்த நஞ்சு' என்று குறிப்பிடுகிறார். விந்து நீக்கம் வீடுபேற்றை இழக்கச் செய்யும் என்பதாலும், வீடுபேற்றை விரும்பும் சாதகன் விந்து நீக்கத்திற்குக் காரணமான சிற்றின்பத்தை வெறுத்து ஒதுக்குதலே விந்து ஜெயம் என்பதாலும் சினம்; செய்த நஞ்சு என்றார். விந்து மாற்றம் அடைந்து, சகஸ்ர தளத்தில் மோதி, அமுதமாக மாறுகிறது. அதனைக் கேசரி யோக முத்திரையில் நாவை மடித்து உண்டவர்கள் நீண்ட ஆயுளையும் ஒலி ஒளிகளைப் பெற்ற வீடுபேறு அடைவர். அத்தகைய சிறப்புடையவன் சிவன் அதனால் சினஞ்செய்த நஞ்சுண்ட தேவர் தலைவனான சிவனை அடைய வேண்டும் என்பது பெறப்படுகின்றது. இறைப்பேறடைய எண்ணமின்றி இருப்பாரைக் கண்டு,

"கண்டம் கறுதத் கருத்தறி வாரில்லை" என்கிறார் திருமூலர் (Manikam, 2004). சிவபெருமானைக் குறிக்கும் போது,

"விடங்கொண்ட கண்டன்" என்றும்

"மைதாழ்ந் திலங்கு மிடறுடை யோனே" என்றும் பலவாறாகக் குறிப்பிடுகின்றது திருமந்திரம்.

## கங்கைப் படர்சடை

சிவபெருமான் பகீரதன் தவத்தினை ஏற்றுக் கொண்டு ஆகாய கங்கையை பூமிக்குக் கொடுத்தபோது, பூமி கங்கையின் வேகத்தைத் தாங்காது என்பதால் தன் சடையில் தாங்கிப் பூமியில் விட்டான் என்பது புராணச் செய்தி இதனை உள்ளடக்கித் திருமந்திரம்,

"தேய்ந்தற் றொழிந்த இளமை கடைமுறை

ஆய்ந்தற்ற பின்னை அரிய கருமங்கள்

பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை

ஓர்ந்துற்றுச் கொள்ளும் உயிருள்ள போதே"

என்கிறது (Manikam, 2004). இளமை அழியக்கூடாது என்பதாலும், இளவயதிலேயே இறையுணர்வும் விந்து ஜெயமும் பெறுவது பேரின்ப வாழ்விற்கு வித்திடும் என்பதாலும் இறைவன் பெருமையைக் கூறி, அவன் பாதங்களைப் பற்றுதல் வேண்டும் என்று இப்பாடல் சுட்டுகிறது. ஆகையால் சீவர்கள் பற்றுக்கோடாக இறைவன் பாதங்களைப் பற்ற வேண்டும் என்பது அறியப்படுகிறது. எனவே திருமந்திரம் சிவனுக்குரிய அணிகலன் களையும் அதனை அவன் அணிந்ததற்கான காரணங்களையும், அவற்றின் உட்பொருள்களையும் உலகிற்கு உணர்த்தி வழிகாட்டுகிறது எனலாம்.

## சிவன் செயல்கள்

ஐந்தொழில்களைப் புரியும் இறைவன் எல்லாமாய் எல்லாவற்றுள்ளும் நிறைந்துள்ளான். இதனை உணராத தேவர், அசுரர், மனிதர் முதலானவர்களுக்கு இறைவன் பல செயல்களைச் செய்து தன் இறைத் தன்மையை நிலைநாட்டுகிறான். அன்பு வடிவான சிவன், தேவ அசுரர்க்கு இடையே ஏற்படும் அழிவுகளையும் தேவ-அசுர- மனிதர்களுக்கிடையே ஏற்படும் அகந்தைகளையும் நீக்குமாறு செய்வான். சுருங்கக் கூறின் மும்மலங்களை நீக்குவதற்காக இறைவன் செய்த செயல்கள் புராணச் செய்தி நின்று இன்றளவும் மக்கள் மனமாசுகளை நீக்கும் கருவிகளாக விளங்குகின்றன.

## சக்தி சிவனை வழிபடல்

பஞ்ச பூதத் தலங்களில் ஒன்று காஞ்சிபுரம். அது மண்ணின் கூறு. சிவனை இத்தலத்தில் மண்ணில் வடித்துத் தவஞ்செய்து சிவனோடு சேர்ந்தாள் சக்தி. இதனை,

"அடிசேர் வன்னென்னஎம் ஆதியை நோக்கி

முடிசேர் மலைமக் னார்மக ளாகித்

திடமார் தவஞ்செய்து தேவர் அறியப்

படியார அர்ச்சித்துப் பத்திசெய் தாளே"

என்னும் திருமந்திரப் பாடல் விளக்குகின்றது (Manikam, 2004). சக்தி மன வலிமையோடு உறுதியாக நின்று தவஞ்செய்து தேவர் அறிய இறைவனை அடைந்தாள் என்பது புராணச் செய்தி. மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தி உச்சந்தலையில் விளங்கும் சிற்சக்தியாகிய சிவனை அடைந்தாள் என்ற உண்மையும் சீவன் சிவனாகும் என்ற தத்துவமும் இதன் மூலம் உலக மக்களுக்கு எடுத்துரைக்கப்படுகிறது.

'மாலுக்கு சக்கரமும் பிரம்மனுக்கு வாளும் அருளிய சிவன்'

திருமாலுக்குச் சக்கரத்தையும் பிரமனுக்கு வாளையும் சிவன் அளித்தான் என்னும் புராணச் செய்தி.

"ஆழி கொடுத்தனன் அச்சுதற் கவ்வழி

வாழி பிரமற்கும் வாள்கொடுத் தானே"

என்னும் திருமந்திரப் பாடலில் இடம் பெறுகிறது. சீவனுக்கு உலகப்பற்று உள்ள போது சுவாதிட்டானம், மணிபூரகம் இரண்டு சக்கரங்களும் முறையே அயன், அரிக்கு உரியவை. உலகப் பற்று நீங்கிய நிலையில் சிவனின் அபான வாயு. சுவாதிட்டான சக்கரமான நீர்ப் பிரதேசத்திலிருந்து மேல் செல்லவும், மணிபூரகத்திலுள்ள மாலும் உலக மயக்கத்திலிருந்து சீவனை விடுபடச் செய்ய அபானனும் பிராணனும் சுழுமுனையில் ஒன்று பட்டுச் சகஸ்ரதளத்தை விரிவடையச் செய்யும் திருமாலும் பிரமனோடு ஒளிமயமான உருத்திரனைச் சுற்றிவர இறைவன் சுவாதிட்டானத்தில் இருந்துகொண்டு பிறப்புத் தொழிலைப் பிரமன் செய்யாதது கண்டு, ஒளியினைப் பிரமனுக்குக் கொடுத்தான். அதுவே ஒளிவீசும் வச்சிராயுதம் (வாள்) என்று புராணங்களில் பேசப்படுகிறது. சீவன் உலக இயக்கத்தில் நிலைபெற்ற போது மணிபூரகத்தில் இடமாகக் கொண்ட திருமால், பேரின்பத்தை விரும்பியபோது சகஸ்ரதளத்தில் இருக்குமாறு இடமளித்தான் உருத்திரன். இதனையே திருமால் சுதர்சன சக்கரத்தைத் தாங்க முடியாமல் சிவனை வேண்டியதால், சிவன் தன் உடலில் பாதியைத் திருமாலுக்குப் பகிர்ந்து தந்தான் என்பதும் திருமந்திரத்தில் இடம்பெறும் புராணச் செய்தியாகும்.

## பிரமன் தலை கொய்தல்

"கொலையிற் பிழைத்த பிரசா பதியைத்

தலையைத் தடிந்திட்டுத் தானங்கி யிட்டு

நிலையுல குக்கிவன் வேண்டுமென் றெண்ணித்

தலையை யரிந்திட்டுச் சந்தி செய் தானே"

என்பது திருமந்திரம் கொலையிள் பிழைத்த பிரசாபதி என்பது சுவாதிட்டமான சக்கரத்தில் உள்ள பிரமன் விந்து நீக்கம் செய்து கொண்டு இருக்கிறான். பிரமனின் இச்செயலைக் கடிந்த சிவன் பிரமன் தலையைக் கிள்ளினான் என்பது புராணம்.

## அந்தகாசுரன் அழிதல்

"குருத்துயர் சூலங்கைக் கொண்டுகொன்றானே"

என்னும் திருமந்திரப் பாடலில் சீவர்களது உள்ளத்தில் இருக்கும் அறியாமை என்னும் அந்தகனாகிய அசுரன் சிவன் சூலத்தால் அழிந்தமை கூறப்படுகிறது. அறியாமை உலகில் வெளியில்

இல்லை; உள்ளத்தில் உள்ளது; அஃது இறையருளால் நீக்கப்பட வேண்டும் என்பதே பாடலின் உட்பொருள்.

## சலந்தராசுரன் அழிவு

"எங்கும் கலந்துமென் உள்ளத் தெழுகின்ற

அங்க முதல்வன் அருமறை யோதிபாற்

பொங்குஞ் சலந்தரன் போர் செய்ய நீர்மையின்

அங்கு விரற்குறித் தாழிசெய் தானே"

என்பது திருமந்திரப் பாடல் எங்கும் கலந்து சீவனின் உள்ளத்தில் எழுபவன் சிவன் (Manikam, 2004). அவன் வேதங்களை ஓதக் கூடியவன் சலந்தரன் தேவர்களுடன் போர் செய்த போது அவனது வலிமைக்கு ஈடுகொடுக்க முடியாத தேவர்களுக்காக சிவன் சலந்தரனோடு போர் புரிந்தான். அப்போது தரையில் கால்சட்டை விரலால் ஒரு சக்கரத்தை எழுதி அச்சக்கரத்தை எடுக்குமாறு சவால் விட்டான். அசுரனால் அச்சக்கரத்தை எடுக்க இயலவில்லை. சிவபெருமான் இலகுவாக எடுத்து அசுரன் மீதெறிந்து அவனை அழித்தான். தேவர்கள் சிவன் மீது மலர்மாரி பொழிந்து போற்றினர். இப்புராண நிகழ்ச்சி நிகழ்ந்த இடம் திருவிற்குடி எனும் ஊராகும்.

## முப்புரம் அழித்தல்

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்

முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்

முப்புர மாவது மும்மல காரியம்

அப்புரம் எய்தமை யாரறி வாரே"

என்னும் திருமந்திரப்பாடல் முப்புரம் அழிந்த புராணச் செய்தியைக் குறிக்கிறது. சிவன் முப்புரத்தை அழித்தான் என்பது மனத்தெளிவில்லாத மூடர்கள் கருத்து என்கிறார் திருமூலர் (Manikam, 2004). முப்புரமாக உருவகிக்கப்படுவது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலம். இவற்றை இறைவனின் அருளால் கிட்டும் ஞானத்தால் சுட்டெரிப்பவர் பேரின்பம் அடைவர். இதனை உணராத பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றால் ஆன கோட்டைகளை வித்யூன்மால், தாருகாட்சன், கமலாட்சன் ஆகிய மூவரும் வானில் இயங்கியதாக நம்பிய மக்களின் அறியாமையைக் கண்டு மனமிரங்குகிறார் திருமூலர். தனக்கு அழிவையும், தன்னையொத்த பிற மக்களுக்கு இன்னலையும் ஏற்படுத்தும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் மூலாக்கினியை எழுப்பிச் சுட்டெரிப்பதையே இக்கதை குறிக்கிறது.

## இராவணன் கயிலையை பெயர்த் தெடுத்தல்

அகந்தையின் காரணமாகவும், தன்னம்பிக்கையின் காரணமாகவும் இராவணன் தன் இருபது தோள்களால் கயிலை மலையை எடுத்து இறைவனைச் சோதிக்க முயன்றான் என்பது புராணச் செய்தி. சிவன் தன் கால் பெருவிரலால் அழுத்தியவுடன் வலி தாங்க முடியாத இராவணன் தன் தவறுணர்ந்து வருந்தி வேண்டி நிற்க இறைவன் அவனுக்கு அருள்புரிந்தான் என்பதை திருமந்திரம்,

"தாங்கி இருபது தோளுந் தடவரை

ஓங்க எடுத்தவன் ஒப்பில் பெருவலி

ஆங்கு நெரித்தம ராவென் றழைத்தபின்

நீங்கா அருள் செய்தான் நின்மலன்தானே"

என்று சுட்டிக்காட்டுகிறது.

தன் அகந்தையால் கயிலை மலையைப் பெயர்த்தெடுத்து முற்பட்டு இயலாத போது இறைவனை ‘அமரா’ என்றழைத்து இவ்வாறே சீவர்களிடத்து நான் என்ற எண்ணமும், மாயையால் உலகப் பொருள்களின் மீது பற்றும் ஏற்படத் துன்பம் விளைகிறது. இதனை உணர்ந்து விடுதலை பெற நினைக்கும் சீவர்கள் ‘சிவாய நம’ என்று சிந்திக்க முற்பட்டுச் செயலறும் போது பேரின்பம் அடைவர்.

## வடதிசை உயர தென்திசை தாழ்தல்

“நடவுநில் லாதிவ் வுலகஞ் சரிந்து

கெடுகின்ற தெம்பெரு மானென்ன ஈசன்

நடுவுள அங்கி அகத்திய நீ போய்

முடுகிய வையத்து முன்னிரென் றானே”

உலகம் நிலைகுலைந்த போது சிவன் ஆணையிட, அகத்தியர் தென்பொதிய மலை சென்று சமன்படுத்தினான் என்னும் வரலாற்றை உள்ளடக்கிய திருமந்திர பாடல் இதுவாகும். கந்த புராணத்தில் இச்செய்தி இடம்பெறுகிறது (Manikam, 2004).

## முருகனின் தோற்றம்

“எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்

தந்தை தன் முன்னே சண்முகம் தோன்றலால்”

என்று திருமந்திரம் முருகனைக் குறிக்கிறது (Manikam, 2004). முருகன் சிவகுமாரன், சிவகுமாரன் என்பது ஆன்மாவே. தந்தைக்கு உள்ள தன்மையை மகன் பெறுவது சிவகுமாரத் தத்துவம். அதாவது சீவன் அல்லது ஆன்மா நின் மலாவத்தையில் சிவனாவது. சீவன் நின்மலாவத்தையில் பொருந்திய புரவ நடுவில் தோன்றும் ஒளியும் பெருகிப் பேரொளியாகும்போது சீவன் சிவகுமாரன் ஆகிறது. இந்தத் தத்துவத்தை உள்ளடக்கியே திருமந்திரம் முருகன் தோற்றத்தைக் குறிக்கிறது.

## சிவநடனம்

சிவன் ஆடிய நடனங்கள் பல அவற்றுள் 1.கொடுகொட்டி, 2.பாண்டரங்கம், 3.கோடு, 4.சங்காரம், 5.நடம் எட்டு, 6.நடம் ஐந்து, 7.நடம் ஆறு, 8.தேவதாருவனம், 9.தில்லைவனம், 10.வடமாவனம் என்று பகுத்துக் கூறுகிறது. சிவபெருமான நடனம் ஆடிய இடங்கள் பலவற்றை ஒன்று சேர்த்துத் திருமந்திரம்.

“காளியோ டாடிக் கனகா சலத்தாடிக்

கூளியோ டாடிக் குவலயத் தேயாடி

நீடிய நீர்தீகால் நீள்வா னிடையாடி

நாளுற அம்பலத் தேயாடும் நாதனே”

என்று பாடுகிறது.

## முயலகன் அழிவு

“ஆகாச மாமுட லங்கார் முயலகன்”

என்னும் பாடல் முயலகன் அழிவைக் குறிக்கிறது. இறைவன் நடனமிடும் ஓரிடம் ஆகாயம். அதில் கருமையே முயலகன் என்னும் உருவகம். இம்முயலகனே சீவர்களிடம் இருளைப் பெருக்கும்

மும்மலம். திசை எட்டுக்கைகளாக அமைத்து அவனது மேலாடையாக விளங்க, இறைவனின் முக்கண்களே இடகலை பிங்கலை தீயாக இருக்க அறிவுப் பெருவெளியாகிய ஞான வெளியில், இருளாகிய முயலகன் அழியுமாறு ஆடுபவன் சிவன் என்பது இத்திருமந்திரத்தின் உட்கருத்து.

## திருபாற்கடல் கடைதல்

திருபாற்கடல் கடைதலாகிய புராணக் கதையைச் சிவபுராணம் கூறுகிறது. இதனைத் திருமந்திரமும்,

“மிக்கார் அமுதுண்ண நஞ்சுண்ட மேலவன்

தக்கார் உரைத்த தவநெறி யேசென்று

புக்கால் அருளும் பொன்னுரை ஞானத்தை

நக்கார் கழல்வழி நாடுமின் நீரே”

குறிப்பிடுகிறது. அகந்தை மிகுந்த தேவர்கள் திருப்பாற்கடல் கடைந்தபோது வெளிப்பட்ட அமுதத்தை உண்ண, சிவன் நஞ்சினை உண்டான்; குரு உரைத்த தவவழி நின்று அவனை அடைந்தால் அவன் ஞானத்தைத் தருவான் எனவே சிவன் உபதேசித்த வழிநின்று அவனை அடைதல் வேண்டும் என்பது இப்பாடலின் பொருள்.

## முடிவுரை

சிவன் பிறப்பு, இறப்பு அற்றவன். சிவன் தேவர்களின் தெய்வமாக இருப்பவன். மக்களைக் காக்கும் மகேசனாக வீற்றிருப்பவன். அசுரனை அழிக்கும் ஆற்றல் வாய்ந்தவன். அவனைப் போல மற்றொரு தெய்வத்தைத் தேடினாலும் காண முடியாது. அவனோடு ஒப்பு நோக்கிக் கூறத்தக்க தகுதியும் பிற கடவுளுக்கும் இல்லை. திருமூலர். இவற்றால் அனைத்து மக்களுக்கும், சீவர்களுக்கும், தேவர்களுக்கும் தெய்வமாகவும் தலைவனாகவும் விளங்குபவன் சிவன் என்பது உறுதியாகின்றது.

## References

Azhagar Nambi, (2021) Thirumoolar Aruliya Thirumanthiram in 3 Volumes, Kavitha Publication, Chennai, India

Manikam, A. (2004) Thirumanthiram, Varthaman Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License